SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.ச.அசோக், இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், தருமபுரி – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (4ப) எண்.01

நாள்: 02.03.2022
பிலவ, மாசி – 18
திருவள்ளுவராண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.4520 / 2018 / பி3, நாள். 24.12.2021.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், தருமபுரி, உதவி ஆணையர் அலுவலகத்தில் பதிவுரு எழுத்தராக பணியாற்றிய திரு.மு.சத்தியநாதன் பணியிடையே 05.11.2016–ல் மரணமடைந்தார் எனவும், அன்னாரின் மகனான திரு.ச.அசோக் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 16.10.2017 நாளிட்ட

..2.

Scanned with CamScanner

கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார் எனவும், அன்னார் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயது தகுதி பெற்றிருந்தார் எனவும், அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி தனியரால் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது எனவும், இறந்த அரசுப் பணியாளரின் மனைவி திருமதி.எம்.உமா அவர்கள், அங்கன்வாடி பணியாளராக பணிபுரிந்து வந்தாலும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக தருமபுரி வட்டாட்சியர் அளித்த சான்றின் அடிப்படையிலும், ஆணையரது செ.மு.ந.க.எண்.67123-2 / 2016 / பி3, நாள்.13.07.2018-ல் திரு.ச.அசோக் என்பவருக்கு தருமபுரி உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 23.07.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், எனவே, திரு.ச.அசோக் என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 23.07.2018 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறையில், தருமபுரி, உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ச.அசோக் என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 23.07.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.775 / க்யு 1 / 2022, நாள்.13.01.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

திரு.ச.அசோக், இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் அலுவலகம், தருமபுரி
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

Scanned with CamScanner

நகல்:–
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner